எண்.112/2024 நாள்: 23.09.2024

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

எண். 3, தேர்வாணைய சாலை, சென்னை – 600 003.

**செய்தி வெளியீடு**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு –II (தொகுதி II மற்றும் IIA பணிகள்)-இல் அடங்கிய பதவிகளுக்கான முதல்நிலைத் தேர்வு கடந்த 14.09.2024 மு.ப. நடத்தப்பட்டது. இதில் பொதுத்தமிழ்/பொது ஆங்கிலம் மற்றும் பொது அறிவுக்கான உத்தேச விடைகள் (Tentative Key) தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த உத்தேச விடைகளின் மீது முறையீடு செய்ய விரும்பும் தேர்வர்கள் உத்தேச விடைகள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள், அதாவது 30.09.2024 மாலை 5.45-க்குள் தேர்வாணைய இணையதளத்தில் உள்ள "Answer Key Challenge" என்ற சாளரத்தைப் பயன்படுத்தி மட்டுமே முறையீடு செய்யலாம். இதற்கான அறிவுரைகள் வழிமுறைகள் தேர்வாணைய இணையதளத்திலேயே (www.tnpsc.gov.in) வழங்கப்பட்டுள்ளன. அஞ்சல் வழியாகவும் மின்னஞ்சல் வழியாகவும் பெறப்படும் முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

A. ஜான் லூயிஸ், இ.ஆ.ப.,
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்